Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ்

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 013 | திங்கள் Monday | 13.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# “234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது”

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



புதுக்கோட்டை: "200 தொகுதியில் வெற்றி பெறுவோம் என்று ஏற்கெனவே தெரிவித்து இருந்தோம். தற்போதுள்ள மக்கள் வரவேற்பையும், கூட்டத்தையும் பார்க்கும்போது, 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது," என திமுக தலைவரும், முதல்வருமானமு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் போட்டியிடும் திமுக வேட்பாளர்கள் திருமயம் எஸ்.ரகுபதி,ஆலங்குடி சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வை.முத்து ராஜா, விராலிமலை கே.கே. செல்லபாண்டியன், கந்தர்வக்கோட்டையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் எம்.சின்னதுரை மற்றும் அறந்தாங்கியில் காங்கிரஸ் வேட்பாளர் எஸ்.டி.ராமச்சந்திரன் ஆகியோரை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்.

புதுக்கோட்டையில் நடைபயிற்சி மேற்கொண்ட அவர், விராலிமலை தொகுதிக்கு உட்பட்ட இலுப்பூர் கடைவீதியில் கூடியிருந்த பொதுமக்களை சந்தித்து திமுக வேட்பாளருக்கு வாக்கு சேகரித்தார். அங்கு வந்த தனியார் பேருந்திலும் ஏறி பயணிகளிடம் வாக்கு சேகரித்தார். அப்போது, செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தேர்தலில் திமுக கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு அமோகமாகவும், சிறப்பாகவும் இருக்கிறது. அதிமுக பொதுச் செயலாளர் தோல்வியின் உச்சத்துக்கு சென்றுவிட்டதால் விரக்தியில் தமிழக அரசு நிதி மேலாண்மையை முறையாகக் கையாளவில்லை என்று பேசி இருக்கிறார். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

200 தொகுதியில் வெற்றி பெறுவோம் என்று ஏற்கெனவே தெரிவித்து இருந்தோம். தற்போதுள்ள மக்கள் வரவேற்பையும், கூட்டத்தையும் பார்க்கும்போது, 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

பாஜகவில் இருந்து எத்தனை பேர் வந்தாலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை யாராலும் வெல்ல முடியாது. தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளை மாற்றி உள்ளனர். இது போன்று எதைவேண்டுமானாலும் செய்யட்டும், இதற்கு மேலும் செய்வார்கள். அதைப் பற்றி நாங்கள் கலவைப்படமாட்டோம்.கட்சியை டெல்லியில் அடமானம் வைத்துவிட்டு அதிமுகவினர் அடிமையாகி விட்டனர். அதனால் அவர்களை டெல்லி தான் இயக்குகிறது. அதிமுக என்ற திராவிட கட்சி இப்படிப் போனதை நினைத்து வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம்.

நடிகர் உள்ளிட்ட யார் வந்தாலும் நாங்கள் கவலைப்படவில்லை. நாங்கள் எங்கள் வேலையை பார்த்துக்கொண்டு இருக்கிறோம். நடிகர் பின்னால் சென்று விபத்துக்கள் நேரிடுவதை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு நடிகர் பின்னால் செல்லும் இளைஞர்கள் விரைவில் திருந்துவார்கள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

# தலைமை செயலாளர் மாற்றம், சந்தீப் மிட்டல் நியமனத்தை திரும்பப்பெறுக; தேர்தல் ஆணையத்துக்கு டி.ஆர்.பாலு கடிதம்



சென்னை: தமிழக தலைமைச் செயலாளரை மாற்றியும், பாஜக, ஆர்எஸ்எஸ். ஆதரவாளரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை(DVAC) தலைமை இயக்குநராகவும் நியமித்து பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளைத் திரும்பப் பெற வலியுறுத்திதேர்தல்ஆணையத்துக்கு திமுக எம்.பி.யும், நாடாளுமன்ற மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக தலைமைச் செயலாளராகப் பணியாற்றி வந்த என்.முருகானந்தத்துக்கு பதிலாக, சாய் குமாரை தலைமைச் செயலாளராக தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

இந்தத் தன்னிச்சையான மற்றும் நியாயமற்ற பணிமாறுதலுக்கு, திமுக தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறது. தேர்தல் ஆணையத்தின் உத்தரவில் இதற்கான எவ்விதக் காரணங்களும் குறிப்பிடப்படவில்லை; மேலும், முருகானந்தம் குறித்து எந்தவொரு முக்கிய அரசியல் கட்சியும் எவ்விதப் புகாரும் அளிக்கவில்லை. அவர் அப்பதவியிலிருந்து இடமாற்றம் செய்யப்படுவதற்கு எவ்விதமான தர்க்கரீதியான அல்லது நியாயமான காரணங்களும் இல்லை முருகானந்தம் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகத் தலைமைச் செயலாளராகப் பணியாற்றி வருவதால், தேர்தல் காலத்தில் அரசாங்கத்தின் செயல்பாடுகள் எவ்விதத் தடையுமின்றிச் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்கு மிகவும் பொருத்தமானவர் அவரே ஆவார். இத்தகைய சூழலில், 08.04.2026 தேதியிட்ட உத்தரவை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மீண்டும் தலைமைச் செயலாளராக முருகானந்தத்தை பணியமர்த்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டின் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை (DVAC) தலைமை இயக்குநராக (DGP) டாக்டர் சந்தீப் மிட்டலை நியமித்திருப்பதற்கு எங்களின் கடும் ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

DVAC–இன் செயல்பாடுகளின் தன்மையைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், களங்கமற்ற நேர்மை,நடுநிலைமை மற்றும் எவ்விதக் குறைபாடுகளுமற்ற பணிப்பதிவு ஆகியவற்றைக் கொண்ட ஓர் அதிகாரியை மட்டுமே DVAC–இன் தலைவராக நியமித்திருக்க வேண்டும்.

டாக்டர் சந்தீப் மிட்டல் பாஜக மற்றும் RSS அமைப்புகளின் ஆதரவாளர்என்பதுஅனைவரும் அறிந்த ஒரு உண்மையாகும். இது வெறும் யூகத்தின் அடிப்படையில் எழுப்பப்படும் ஐயம் அல்ல; மாறாக, டாக்டர் சந்தீப் மிட்டல் தனது சமூக ஊடகப் பக்கங்களில் பதிவிட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில், அவரே ஒப்புக்கொண்ட ஒரு உண்மையாகும்.

பாஜக தலைமையிலானதும், இத்தேர்தல் களத்தில் பிரதான எதிர்க்கட்சியாகப் போட்டியிடும் அதிமுகவை உள்ளடக்கியதுமான 'தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு' (NDA) ஆதரவாகவே அவர் செயல்படுவார் என்பதில், எங்கள் மனதிலும் தமிழ்நாட்டு மக்களின் மனதிலும் எவ்வித ஐயமும் இல்லை.

தனது சித்தாந்தச் சார்புகளைத் தவிர, டாக்டர் மிட்டல் மீது கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன.

டாக்டர் மிட்டல் பொதுவெளியில் வெளியிட்டுள்ள கருத்துக்கள்,அவர் RSS மற்றும் பாஜகவின் தீவிர ஆதரவாளர் என்பதையும், முஸ்லிம்களுக்கும் இடதுசாரிச் சித்தா ந்தத்திற்கும் எதிராகவெறுப்புப் பேச்சுகளைப் பேசிய நீண்டகாலப் பின்னணியைக் கொண்டவர் என்பதையும் எங்கள் மனதில் எவ்வித ஐயமுமின்றி உறுதிப்படுத்துகின்றன. அவர் மீது கடுமையான ஊழல் மற்றும் முறைகேடான நடத்தை தொடர்பான குற்றச்சாட்டுகளும் நிலுவையில் உள்ளன. இத்தகைய பின்னணியைக் கொண்ட ஒரு அதிகாரியை DVAC–இன் (ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை) தலைவராக நியமிப்பது, பொதுமக்களின் நலனுக்கு உகந்ததாக இருக்காது.

ஒரு நடுநிலையான மற்றும் பாரபட்சமற்ற அரசியலமைப்பு அமைப்பாகச் செயல்பட வேண்டிய தேர்தல் ஆணையம் எனும் நிறுவனம், பாரதிய ஜனதா கட்சியின் (BJP) தேர்தல் முகவராகச் செயல்படுவது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. தேர்தல் ஆணையம் அரசியலமைப்புக்கும் இந்நாட்டின் சட்டங்களுக்கும் மேலானது என்று, ஆணையத்தில் உள்ள எவருடைய மனதிலும் எவ்விதத் தவறான எண்ணமும் இருக்காது என்று நாங்கள் நம்புகிறோம்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

## “உண்மையான மக்களாட்சியை அமைப்போம்”

## தொண்டர்களுக்கு த.வெ.க. தலைவர் விஜய் அழைப்பு



தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்கள் அனைவருக்கும் வணக்கம்.

வாகைசூடும் வரலாறு திரும்பும் பயணத்தில் உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அளப்பரியது,இன்றியமையாதது. மாற்றத்திற்கான முதன்மைச் சக்தியான நாம், நமது வெற்றிப் பாதையில் சரியாகப் பயணித்துக்கொண்டிருக்கிறோம்.

தேர்தல் நாள் வேகமாக நெருங்கி வரும் இந்த வேளையில் ஒரு வேண்டுகோள். வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்களாகத்தங்களைத்தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக்கொண்டு நம்மோடு தோழர்களாகப் பயணிப்பவர்கள், கழகத்தின் மீது பேரன்பு கொண்டுள்ள என்னுடைய நண்பா, நண்பிகள் அனைவரும் களத்தில் இறங்கிப் பணியாற்றுங்கள்.

அடுத்த பத்து நாள்களும் உங்களுக்கு உகந்த நேரத்தில் காலை, மாலைஎனஇருவேளையும் அவரவர் வசிக்கும் இடங்களில் தினமும் நம் சொந்தங்களாகிய தமிழ்நாட்டு மக்களை வீட்டுக்கு வீடு தேடித் தேடி நேரில் சந்தியுங்கள். நமது கழக வேட்பாளர்களுக்கு விசில் சின்னத்தில் வாக்களிக்குமாறு வேண்டுகோள் வையுங்கள். இந்தக் களப்பணியில் தன்னார்வலர்களாக உங்களை இணைத்துக்கொள்ளுமாறு பேரன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாநில மற்றும் அனைத்துநிலைமாவட்டக் கழக நிர்வாகிகள், நமது கழகத்தின் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பைத் தாருங்கள்.

அனைவரையும் அரவணைத்துத் தேர்தல் பணியாற்றுங்கள். தன்முனைப்பற்ற தோழமை உணர்வோடு அனைவரும் வீட்டுக்கு வீடு சென்று மக்களைச் சந்தியுங்கள்.

இந்தத் தேர்தல் நமக்கானது மட்டுமல்ல, மாபெரும் மாற்றத்திற்கான, ஒரு தலைமுறைக்கான தேர்தல் என்பதை விளக்குங்கள். தன்னலமற்ற உழைப்பைச் செலுத்தி, நமது வெற்றிப் பயணத்திற்கு வலு சேருங்கள்.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான இந்தப் போரில் வெற்றிப் பேரணியாக ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் ஒன்று சேர்ந்து உண்மையான மக்களாட்சியை அமைப்போம்!

வாகை சூடும் வரலாறு திரும்புகிறது! நல்லதே நடக்கும்! வெற்றி நிச்சயம்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



திராவிட முன்னேற்ற கழக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நமது ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் நம் கழகத்தின் சார்பில் மூன்றாவது முறை போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளருமான நமது பாசமிகு அண்ணன் மதிப்பிற்குரிய திரு வசந்தம்.க. கார்த்திகேயன்.B.sc.MLAஅவர்கள்நமதுரிஷிவந்தியம்தொகுதிக்குட்பட்டதிருக்கோவிலூர் மேற்கு ஒன்றியம் பாடியந்தல் ஊராட்சியில் பொதுமக்களை நேரில் சந்தித்தும் வீடு வீடாக சென்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் நம் கழக தலைவர் தளபதியார் அவர்களின் சாதனைகளை எடுத்துரைத்து நமது வெற்றியின் சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கு வாக்காளிக்கும்படி கூறி பொதுமக்களிடையே வாக்குகளை சேகரித்தார்.மேலும் கிராம மக்களும் கட்சி நிர்வாகிகளும் திரு வசந்தம்.க. கார்த்திகேயன்.B.sc.MLA அவர்களுக்கு மலர் தூவியும் மாலை அணிவித்து நம்பிக்கையின் அடையாளமாகவும் சிறந்த ஆட்சியாளருக்கான அடையாளமாகவும் வீரவால் வழங்கி உற்சாக வரவேற்பு அளித்தனர் கிராம மக்களும் கட்சி நிர்வாகிகளும் உள்ளனர்.

# ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி பகுதியில் வீதி வீதியாக சென்று திமுக வேட்பாளர் ராமஜெயம் வாக்கு சேகரிப்பு

## பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியான டேவிஸ்புரம், சிலுவைப்பட்டி சந்திப்பு, தாளமுத்து நகர் மெயின், சொட்டையன் தோப்பு விளக்கு, பாரதி நகர், திரேஸ் நகர், வண்ணார்பேட்டை, மாதா நகர் உள்ளிட்ட பகுதிகளில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துக்கூறி உதயசூரியன் சின்னத்தில்வாக்களித்து தன்னை வெற்றி பெறச் செய்யுமாறு திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுடன் பிரச்சாரத்தில் வாக்குகள் சேகரித்தார்.

நிகழ்வின்போது தூத்துக்குடி மாவட்டத் துணைச் செயலாளரும் தூத்துக்குடி கிழக்கு ஒன்றிய மாப்பிள்ளையூரணி தேர்தல் பொறுப்பாளர் ஜெயக்குமார்ரூபன், ஒன்றிய செயலாளர் சரவணகுமார், ஒன்றிய துணை செயலாளர் கணேசன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்அந்தோணிதனுஷ் பாலன், மாவட்ட வர்த்தகர் அணி பிளோமின்ராஜ்,மாவட்ட இளைஞரணி ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி பால்துரை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நெல்சன், ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், மகளீரணி ஆரோக்கியமேரி, கிளை செயலாளர் ஜேசுராஜ், ஜோதிடர் முருகன், சேவியர், பாரதி, தர்மலிங்கம், பொன்னுச்சாமி, இம்மானுவேல், பாரி மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட திரளானோர் உடனிருந்தனர்.



கடலூர் மாவட்டம் நல்லூர் ஒன்றியம் கீழக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் தொடக்கப் பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது அதில் பள்ளி மேலாண் குழு தலைவி எஸ்.ராஜம் தலைமை தாங்கினார் தலைமை ஆசிரியர் ஏ கோவிந்தராஜு வரவேற்புரை ஆற்றினார் மு . தனலட்சுமி ஆண்டறிக்கை வாசித்தார் மற்றும். சிறப்பு விருந்தினர்கள் வட்டார கல்வி அலுவலர் திரு ராஜேஸ்வரி மற்றும் ஆசிரியர் பயிற்றுனர் செல்வமுருகன் வனக்குழு தலைவர் எஸ் முருகேசன் மற்றும் உதவும் கரங்கள் அறக்கட்டளை நிறுவனர் யா.முனுசாமி அவர்கள் மாணவர்களுக்கு பரிசு பொருள்கள் வழங்கப்பட்டது ஊராட்சி செயலர் எஸ் எஸ் வீரமுத்துமற்றும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ஊர் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் முன்னாள் மாணவர்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் தன்னார்வர்கள் மற்றும் மாணவ மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டனர் நன்றி உரை எஸ் கருப்பையா வழங்கி உள்ளார்.



காரைக்குடி தொகுதிக்கு உட்பட்ட கல்லுப்பட்டி,காயாவயல், அமராவதி புதுார்,ஆறாவயல், அரியக்குடி, இலுப்பக்குடி பர்மா காலணி பகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர் மாங்குடியை ஆதரித்து "கை" சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். நடிகர் விஜய்க்கு அரசியல் அனுபவம் இல்லை, ரசிகர்கள் நிறைய இருப்பதை வரவேற்கிறேன். அதை வைத்து அரசியல் செய்ய முடியாது 10 வருடங்களாக நிதி மற்றும் உள்துறை அமைச்சராகபணிபுரிந்தேன்அரசியல்மற்றும்ஆட்சிசெய்வதுஎளிதல்ல,அவர்காரைக்குடி பரப்புரையில் பேசவே இல்லை, பத்திரிக்கையாளருடன் உரையாடல் இல்லை, பொதுமக்கள் சந்திப்பு இல்லை. ஆட்சி செய்வது வேறு என்று கூறினார் .

# தாரமங்கலம் வடக்கு ஒன்றியத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட ஓமலூர் அதிமுக வேட்பாளர்

சேலம் மாவட்டம் ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள R.மணி எம்.எல்.ஏ., தேர்தலை முன்னிட்டு 09.4.26 தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.



இதன் ஒரு பகுதியாக, ராமிரெட்டிபட்டி ஊராட்சி மற்றும் தாரமங்கலம் வடக்கு ஒன்றிய பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து, வீடுதோறும் சென்று வாக்கு சேகரித்தார்.

பிரசாரத்தின் போது அதிமுக தேர்தல் அறிக்கை, மற்றும் தொகுதி வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம்விளக்கினார்.

மேலும், கடந்த காலத்தில் மேற்கொண்ட வளர்ச்சி பணிகளை எடுத்துரைத்து, மீண்டும் தன்னை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாநில கொள்கை பரப்பு செயலாளர் தமிழரசு, PPS.விக்னேஷ், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.ஓமலூர் தொகுதியில் அதிமுக வேட்பாளர் R.மணி மேற்கொள்ளும் இந்த தீவிர பிரசாரம், தேர்தல் சூழலை மேலும் சூடுபிடிக்கச் செய்துள்ளது.

# கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் பி.ஆர்.ஜி.அருண்குமார் ஜி.என். மில்ஸ் பகுதியில் பிரச்சாரம்



கோவை கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் அதிமுக கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் பி.ஆர்.ஜி.அருண்குமார் ஜி என் மில்ஸ் சுற்றுப்பகுதிக ளான சுப்பிரமணி யம்பாளையம், கவுண்டர் மில்ஸ், உருமாண்டம்பாளையம், கணேஷ் நகர், ஐ டி ஐ, காசி நஞ்சேகவுண்டன் புதூர், ஆதவா சிட்டி, உருமாண்டம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டு இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். முன்னதாக காசி நஞ்சேகவுண்டன்புதூர் மாரியம்மன் கோவில், சுப்பிரமணியம்பாளையம் மாரியம்மன் கோவில்களில் சாமி தரிசனம் செய்துவிட்டு பிரச்சாரம் மேற்கொண்டார். அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்தும், கூட்டணி கட்சியினர் ஆள் உயர மாலை அணிவித்தும் உட்சாக வரவேற்பு வழங்கினர்.

பிரச்சாரத்தில் பேசிய பி ஆர் ஜி அருண்குமார் மத்தியில் ஆளும் மோடி அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்க்க உறுதுணையாக இருப்பேன், அதேபோல் ஸ்டாலின் தான் வராறு விடியல் தர போறாருன்னு சொல்லிட்டு யாருக்கும் விடியல்தரலை,திமுகவின் மந்திரிகளுக்கு மட்டும்தான் விடியலே என்றார்.

அனைவருக்கும் உரிமைத் தொகை என்றார் தந்தாரா? கேஸ்க்கு மானியம் தரேன்னு சொன்னார் தந்தாரா? மாணவர்களுக்கு கல்வி கடன் ரத்துன்னு சொன்னார் பன்னினாரா?

அதேபோல விடியல் பயணம்னு சொல்லி பஸ் வருது அந்த பஸ் நேரத்திற்கு வருதா? வீட்டு வரி உயர்வு பன்னமாட்டேன்னு சொன்னார் பன்னினார். மின் கட்டணம் உயர்த்த மாட்டேன்னு சொன்னார் பன்னினார். எதை எதை பன்ன மாட்டேன் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தாரோ அத்தனையும் பன்னினார் என்று சொல்லி தனக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெறச் செய்யவேண்டும் என கேட்டு தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார்.

# கடையநல்லூர் தொகுதி அதிமுக எம்எல்ஏ வாக்குசேகரிக்க சென்றபோது விரட்டியடிப்பு

## தொகுதி நிதியை பயன்படுத்தாதது ஏன்? பதாகைகளை காட்டி பொதுமக்கள் கேள்வி




தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா மீண்டும் கடையநல்லூர் தொகுதியில் ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் அதிமுக வேட்பாளராக போட்டியிடுகிறார் கடந்த சில நாட்களாக தொகுதியில் வாக்கு சேகரித்து வருகிறார் நேற்று முன் தினம் பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் நைனார் நாகேந்திரன் இவருக்காக கடையநல்லூர் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார் இந்நிலையில் ஆய்க்குடி பகுதியில் நேற்று முன் தினம் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபோது ஆய்க்குடி கம்பிளி பகுதிகளில்சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சிநிதியைபயன்படுத்தாதுஏன்என்றுபதாகைகள் ஏந்தி பொதுமக்கள் வீதியில் நின்றனர்அப்போது திறந்த வெளி வாகனத்தில் வாக்கு சேகரித்துக் கொண்டு வந்த கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அதிமுக வேட்பாளர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா அவ்வழியே வந்து கொண்டிருந்தார் பொதுமக்கள் பதாகைகளை ஏந்திக்கொண்டுஅவரது வாகனத்தை முற்றுகைஇடச்சென்றனர்அப்போதுகாவல்துறையினர் சட்டமன்ற உறுப்பினர் இடம் வேகமாக செல்லுங்கள் என கூறினர் பின்னர் அங்கிருந்த பொதுமக்களை கலைந்து போக காவல்துறையினர் தள்ளிக் கொண்டு சென்றனர் இதனால் வாக்கு சேகரிக்க வந்த இடத்தில் பொது மக்களின் கோபத்திற்கு ஆளான அதிமுக வேட்பாளர் வந்த வேகத்திலேயே சென்று விட்டார் அப்பகுதியில் இது பரபரப்பாகபேசப்பட்டது ஏனென்றால் கடந்த முறை எம்எல்ஏ ஆவதற்கு ஆய்க்குடி பேரூராட்சி பகுதியில் தான் அதிக அளவு வாக்குகள் கிடைத்தது என்றும் அதீக வாக்குகள் கிடைத்த இடத்திலேயே அவரால் வாக்கு சேகரிக்க முடியவில்லை என்றுதெரிவித்தனர் ஏற்கனவே கடந்த மாதம் இவர் மகளிர் உரிமைத்தொகை பெறும் பெண்களை அவதூறு வார்த்தைகளால் பொது மேடையில் பேசியது குறிப்பிடத்தக்கது உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் மறுபடியும் போட்டியிடும் வேட்பாளர் என்ற முறையில்வாக்கு சேகரிக்க முடியாமல் சென்றது அப்பகுதி அதிமுகவினரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது



ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் சு.முத்துச்சாமி அவர்களுக்கு 47 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தகோபு பாகம் 207ல் வீடு வீடாக நடந்து சென்று உதயசூரியன் சின்னத்திற்கு பொதுமக்களிடம் வாக்கு கேட்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



ஈரோடு மாவட்டம் ஆனைக்கால்பாளையத்தில் உள்ள மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் காவல்துறையினருக்கு வாராந்திர கவாத்து பயிற்சி (11/04/26) அன்று நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் சுருதி தலைமை வகித்தார். பின்னர் காவல்துறையினரின் பயிற்சி அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு ஆய்வு செய்தார்.

# மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர் திமுக அரசின் சாதனைகள் எடுத்துக்கூறி வாக்குசேகரிப்பு!

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர் அவர்கள் மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட சரவம்பாக்கம் கூட்டு சாலை, கொளத்தூர், பெருவேலி, பையம்பாடி,சிறுநல்லூர், அவுரிமேடு , உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் ஒன்றிய கழக செயலாளர் , பொன் சிவகுமார், தலைமையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர்.

அப்பொழுது வெற்றி வேட்பாளர் அமுலு பொன்மலர் அவர்களுக்கு ஆரத்தி எடுத்து, மாலை அணிவித்து, மலர் தூவி உற்சாக வரவேற்பளித்தனர். அதனைத் தொடர்ந்து வேட்பாளர் அமுலு பொன்மலர், பேசுவையில் முதலமைச்சர் செய்த மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம், காலை உணவு திட்டம், கலைஞர் கனவு இல்லம், மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை எடுத்துக் கூறி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்







மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் காசிபாளையம் மலைக்கோயில் பகுதி, முத்தம்பாளையம் ஹவுசிங் யூனிட் 1,2,3 , சென்னிமலை ரோடு கே.கே நகர், ஸ்ரீ கார்டன் ஆவின் பூத் சங்கந்துறை, காசிபாளையம் பஸ் ஸ்டாப் ஆகிய பகுதிகளில் வார்டு 50 ல் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக கழக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.

# தூத்துக்குடி மாநகரில் 24, 25 மற்றும் 26 ஆகிய வார்டுகளில் திமுக வேட்பாளர் கீதாஜீவன் வாக்குசேகரிப்பு



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கீதாஜீவன் தூத்துக்குடி மாநகரில் 24, 25 மற்றும் 26 ஆகிய வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

அந்நிகழ்வின் போது உடன் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தேசியசெயற்குழுஉறுப்பினர் ஏ.பி.சி.வி.சண்முகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகரச் செயலாளர் தனலட்சுமி, மதிமுக மாநகர செயலாளர் முருக பூபதி, தேமுதிக மாவட்ட செயலாளர் தயாளலிங்கம், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் யூசுப், மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் அசன் அலி உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட துணை செயலாளர் ராஜமோகன் செல்வின், மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், நிர்மல்ராஜ், வட்டச் செயலாளர்கள் ரவி இளங்கோ, ஆல்பர்ட், மரியா ஹான்ஸ், ஜேம்ஸ் ரோலண்ட், மாமன்ற உறுப்பினர்கள் எடின்டா, மெட்டில்டா, மரியகீதா மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட திரளானோர் உடனிருந்தனர்.

## மதுரை திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட சிந்தாமணி, மேல அனுப்பானடி பகுதிகளில்

# அதிமுக வேட்பாளர் ராஜன் செல்லப்பாவை ஆதரித்து பாரதிய ஜனதா கட்சி துணைத்தலைவர் நடிகை குஷ்பூ தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்



மதுரை திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட சிந்தாமணி , மேல அனுப்பானடி பகுதிகளில் அதிமுக வேட்பாளர் ராஜன் செல்லப்பாவை ஆதரித்து பாரதிய ஜனதா கட்சி துணைத் தலைவர் நடிகை குஷ்பூ தேர்தல் பரப்பரை மேற்கொண்டார் சிந்தாமணி பகுதியை பொறுத்தவரை அதிமுகவின் கோட்டையாககருதப்படும்ஆனால் தற்போது இங்கு அதிமுகவை விட பாஜகவினர் அதிகமாக உள்ளனர். ஏராளமான தொண்டர்கள் காந்திக்கு உள்ளாய் அணிந்து பாரத் மாதா கி ஜே என கோஷம் எழுப்பி உள்ளனர் மேலும் பாரதியார் ஜனதா பால்வாடி அணியும் குழந்தைகளுடன் தேர்தல் பரப்பரை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

சிந்தாமணி பகுதிகளில் குடியிருந்த வாக்காளர்களிடம் ஐந்து வருட காலம் ஆட்சியில் இருந்தவர்கள் தொகுதிக்கு எதுவுமே செய்யவில்லை என குறிப்பிட்டார் ஆனால் தொகுதி எம்எல்ஏ தற்போதைய வேட்பாளர் ராஜன் செல்லப்பா என்பதை மறந்து குஷ்பு பேசினார்

மேலும் பேசி நிறைய மத்திய தொகுதி வேட்பாளராக போட்டியிடும் பிடிஆர் தியாகராஜனை குறிப்பிட்டு நிதி அமைச்சராக பல்வேறு பொறுப்புகளில் இருந்த தியாகராஜன் மதுரைக்கு எதுவுமேசெய்யவில்லை குப்பை நகரமாக உள்ளது இதனை மாற்றி முதலிடத்திற்குகொண்டு செல்ல எடப்பாடி தலைமையில் அதிமுக ஆட்சி அமைக்க இரட்டை இலைக்கு வாக்குகள் கேட்டு தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026, வருகின்ற 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதையொட்டி (10.04.2026) அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் முன்னிலையில் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ள நுண்பார்வையாளர்களுக்கான பயிற்சி நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி காஞ்சன் சௌதரி உட்பட பலர் உள்ளனர்.



# அதிக வாக்குகள் வாங்கிக்கொடுக்கும் வாக்குச்சாவடி முகவர்களுக்கு ஒரு பவுன் தங்க நாணயம் வழங்கப்படும்

## முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி உறுதியளித்தார்

கோவை துடியலூர் அருகே வடமதுரையில் கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதியில் மதச்சாற்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக போட்டியிடும் காங்கிரஸ்கட்சிவேட்பாளர் சூரிய பிரகாஷ் அறிமுகக் கூட்டம் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

கோவை கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி மதச்சாற்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. இந்த தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக சூரிய பிரகாஷ் அறிவிக்கப்பட்டார்.

இதையடுத்து வேட்பாளர் அறிமுகக் கூட்டம் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் துடியலூர் அருகே வடமதுரையில் நடைபெற்றது.

கோவை வடக்கு மாவட்டம் துடியலூர் கிழக்கு பகுதி, பகுதி கழக செயலாளர் வரவேற்றுப்பேசினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்டி.பி.சுப்ரமணியன், கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்மூலனூர்கார்த்தி, மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ ரவி, மாவட்ட கழகத் துணைச் செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி, பி வி மணி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து பேசிய வேட்பாளர் சூரிய பிரகாஷ் கூட்டணி கட்சியினர் தீவிரமாக உழைத்து தன்னை வெற்றிபெறச் செய்து தமிழக முதல்வராக மு க ஸ்டாலினை இரண்டாவது முறையாக பதவி ஏற்க உறுதுணையாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இதில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பங்கேற்று பேசும்போது காங்கிரஸ் வேட்பாளர் சூரியபிரகாஷிற்கு கை சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் ஒவ்வொரு பகுதியிலும் அதிக வாக்குகள் வாங்கிக் கொடுக்கும் வாக்குச் சாவடி முகவர்களுக்கு ஒருபவுன் தங்கநாணயம் வழங்கப்படும் என்றார். மேலும் வெற்றி பெற்று மு க ஸ்டாலின் முதலமைச்சர் ஆனதும் கோவைக்கு வரும்போது அவரை நேரில் சந்திக்க ஏற்பட்டு செய்யப்படும் என உறுதியளித்தார்.

இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ், மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட். விடுதலை சிறுத்தைகள் கட்சி, எஸ் டி பி ஐ, உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள், BLA-2 , BDA, BLC நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இறுதியில் வட்டக் கழக செயலாளர் தமிழ்நிதி நன்றி கூறினார்.

# அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்தில் தி.மு.க. வேட்பாளர் அமுலு பொன்மலரை ஆதரித்து க.செல்வம் எம்பி. திறந்தவெளி வாகனத்தில் வீதியாக சென்று வாக்கு சேகரிப்பு



மதுராந்தகம் தொகுதிதி.மு.க.வேட்பாளர் அமுலு பொன்மலர் வீதி வீதியாக சென்றுவாக்கு சேகரித்த போது பெண்கள் அவருக்கு ஆரத்தி எடுத்து அமோக வரவேற்பு அளித்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி தொகுதி தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், அச்சுறுப்பாக்கம் ஒன்றிய செயலாளர் கண்ணன் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் திரளானோர் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

கடமலைப்புத்தூர், எடையாளம், மின்னல், சித்தாமூர் ஒரத்தி தின்னலூர் உள்ளிட்ட இடங்களில் வாக்கு சேகரித்து தொண்டர்களுடன் வீதிகளில் நடந்துசென்று தெருத்தெருவாக சென்று பெண்களிடம் உங்கள் வீட்டுப் பெண் எனக்கு ஒரே ஒரு வாய்ப்பு தந்து | உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள் அப்போதுதான் தலைவர் அளித்த திட்டங்கள் அனைத்தும் உங்களுக்கு வந்து சேரும் என்று உத்தரவாதம் அளித்து வாக்கு சேகரித்தார். அப்போது கூட்டணி கட்சி மற்றும் தி.மு.க. தொண்டர்கள் ஆரவாரத்துடன் மோட்டார் சைக்கிள்களிலும் ஆட்டோகளிலும், தெரு வீதிகளில் கட்சி கொடிகளை கட்டி ஊர்வலமாக கிராமப்புற பெண்களிடம் | வாக்கு சேகரித்தனர். இந்த நிகழ்வில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 வருகின்ற 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதையொட்டி (11.04.2026) அன்று ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில், தேர்தல் பொதுப்பார்வையாளர் மினிஸ்தி முன்னிலையில் 98 ஈரோடு (கிழக்கு) மற்றும் 106கோபிசெட்டிபாளையம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்கான கூடுதல் வாக்குப்பதிவு இயந்திரங்கள் (Ballot Unit) துணைசுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டதை பிரித்தனுப்பும் பணியினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியின் போது அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடனிருந்தார்கள்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் சு.முத்துசாமி ஈரோடு ஒன்றியத்துக்கு உட்பட்ட நசியனூர் பேரூராட்சி மேற்கு புதூர் சிந்தன் குட்டை ஆகிய பகுதிகளில் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார் . இந்த நிகழ்வில் சமூக நீதி மக்கள் கட்சி மாவீரன் பொல்லான் பேரவை நிறுவனத் தலைவர் வடிவேல் ராமன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் போடி தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் ஓ. பன்னீர் செல்வம் தீவிர வாக்கு சேகரிப்பில், போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னமனூர் மேற்கு ஒன்றியத்தின், கந்தசாமிபுரம், திம்மிநாயக்கன்பட்டி, குப்பனாசாரிபட்டி, சின்னபொட்டிபுரம், ராமகிருஷ்ணாபுரம், டி. புதுக்கோட்டை,முத்தையன்செட்டிபட்டி,எரணம்பட்டி,பங்காருசாமிபுரம்,கோனாம்பட்டி,சங்கராபுரம்,வெம்பக்கோட்டை உள்ளிட்ட பல பகுதிகளில் பொதுமக்களை நேரடியாக சந்தித்து, வாக்கு சேகரித்தார் இந்நிகழ்வில், சின்னமனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் முருகேசன் சின்னமனூர் ஒன்றியம் விமலேஸ்வரன் போடிநாயக்கனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இலட்சுமணன் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத்தின் மாநில, மாவட்ட, நகர், ஒன்றிய, பேரூர் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள்,மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு வாக்குகளை சேகரித்தனர்.




மதசார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் அவர்களுடன் 10.04.2026 அன்று ஜும்மா தொழுகையின் போது ஈரோடு புது மஜித் வீதியில் உள்ள சுல்தான்பேட்டை பள்ளிவாசல் மற்றும் மரப்பாலம் குந்தவை வீதியில் உள்ள பாக்கியாத் பள்ளிவாசல்களில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியினர் மற்றும் மதசார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள் கை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 வருகின்ற 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளதையொட்டி (11.04.2026) அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில், தேர்தல் பொதுப்பார்வையாளர் மினிஸ்தி முன்னிலையில் 98 ஈரோடு (கிழக்கு) மற்றும் 106 கோபிசெட்டிபாளையம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்கான கூடுதல் வாக்குப்பதிவு இயந்திரங்கள் (Ballot Unit) துணை சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடனிருந்தார்கள்.

### நான் உங்க வீட்டு பிள்ளை இது ஊரறிந்த உண்மை...

# புதிய பூமி திரைப்பட கதாநாயகன் எம்.ஜி.ஆரை நினைவு படுத்தும் தென்காசி தொகுதி தி.மு.க வேட்பாளர் கலை கதிரவன்

## தி.மு.க தொண்டர்கள் கூடுதல் உற்சாகம்



தென்காசி சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் கலை கதிரவன் 1971 ல் இதே தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற கா.மு.கதிரவனை போல அமோக பெற்றி பெறுவார் எனவும் தென்காசியை புதியபூமியாக மாற்றி காட்டுவார் என தொண்டர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

இந்நிலையில் இதே தென்காசி தொகுதியில்1971ம் ஆண்டு போட்டியிட்டு வெற்றி பெற்ற கா.மு.கதிரவன் போல தற்போதைய வேட்பாளர் கலை கதிரவனிடமும் பல்வேறு ஒற்றுமைகள் இருப்பதாக மூத்த திமுக வினர் வியக்கின்றனர்.

கா.மு.கதிரவன் மிகவும் சாந்த குணமும், அதிர்ந்து பேசாத தன்மையும் கொண்டவர். அத்துடன் அப்போதே பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர்,பேராசிரியர்போன்ற மூத்த தலைவர்களின் அன்பை பெற்றவராக கா.மு.கதிரவன் விளங்கினார். அதேபோல தற்போதைய திமுக தலைவர்கள் மத்தியில் கலை கதிரவனும் விளங்குகிறார்.

அத்துடன் 1970 காலகட்டத்தில் வெளியான மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா நடித்த புதிய பூமி திரைப்படத்தில் எம்.ஜி.ஆர் கதாபாத்திரத்தின் பெயர் கதிரவன். அதனாலேயே 1970 தேர்தல் நேரத்தில் தென்காசியில் புதியபூமி திரையிடப்பட்டது.

கலைஞர் உடபட தேர்தல்பிரச்சாரத்திற்குவந்த தலைவர்கள் புதியபூமி எம்.ஜி.ஆர் போல கதிரவன் மக்கள் சேவையாற்றுவார் என்று பேசியதாக மூத்த திமுகவினர் நினைவு கூறுகின்றனர்.

அந்த திரைப்படத்தில் இடம் பெற்ற நான் உங்க வீட்டுப் பிள்ளை, இது ஊரறிந்த உண்மை என்ற பாடல் இன்றளவும் புகழ் பெற்ற பாடலாக விளங்குகிறது.

அந்த திரைப்படத்தில் கதிரவன்;(எம்.ஜி.ஆர்) மக்கள் மீது அன்பும் பரிவும் கொண்ட ஒரு மருத்துவர்.கிராமத்தில் மருத்துவ சேவை செய்து, கொள்ளைக்காரர்களை முறியடித்து,தனது சமூக உணர்வை வெளிப்படுத்தும் கதையாக இது அமைந்தது.

அந்த திரைபடத்தில் எம்.ஜி.ஆரின் கதா பாத்திர பெயர்,

அந்த கதாபாத்திரத்தின் தொழில், சேவை போன்ற பல குண நலன்கள் தற்போதைய தென்காசி கதாநாயகனிடம் ((தி.மு.க வேட்பாளர் கலை கதிரவன்) உள்ளது ஆச்சரியப்படத்தக்க வகையில் உள்ளதாக தி மு க வி ன ர் வியக்கின்றனர்.

இந்நிலையில் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு பிரச்சனைகள் இ ன் ற ள வு ம் தீர்க்கப்படாமலேயே உள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, கடந்த காலத்தில் இத்தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய சட்டமன்ற உறுப்பினர்களின் மோசமான செயல்பாட்டின் காரணமாக,தென்காசி தொகுதி பொதுமக்களின் வாழ்வாதாரம் இன்னும் பெரிய அளவில் செழிக்கவில்லை.

தற்போதைய திமுக வேட்பாளர் கலை கதிரவன் வெற்றி பெற்றால் தொகுதி மேம்பட்டு தென்காசி புதிய பூமியாக மாறுமா என்று பொதுமக்கள் ஏக்கத்தில் உள்ளனர்.

தென்காசி மாவட்ட தலைநகர் தொகுதியான தென்காசியில் இருந்து தமிழகத்தின் தலைநகர் சென்னைக்கு ஒரு மாண்புமிகு வை உருவாக்குவதில் மூன்று முகங்கள் களம் காண்கின்றனர்தெற்குமாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் முன்னாள் தெற்கு மாவட்ட செயலாளர் வ ழ க் க றி ஞ ர் சிவபத்மநாபன் முன்னாள் வடக்கு மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் செல்லத்துரை ஆகிய மூவரும் தலைமையின் கட்டளையை ஏற்று அன்பகம் கலையின் கடைக்கண் பார்வையில் பம்பரமாக சுழன்று வருகின்றனர். கடையநல்லூர் தென்காசி வேட்பாளர்களை செல்லத்துரை மற்றும் ஜெயபாலன் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றது பொதுமக்கள் மற்றும் வாக்காளர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது போன்று குற்றாலம் டிரஸ்ஸில் மகாலில் நடந்த ஊழியர் கூட்டத்தில் முன்னாள் செயலாளர்சிவபத்மநாபனின் பேச்சு கழகத்தின் அனைவரையும் ஒன்றிணைத்தது வாக்கு கேட்டு செல்லும் இடங்களில் பொறுப்பாளர் ஜெயபாலனின்உற்சாக நடனம் மாண்புமிகுவை தென்காசியில் உருவாக்கியே தீருவோம்என்ற குறிக்கோளோடுசெயல்பட்டு வருகின்றனர் கழகத்திற்குள் தோழர்கள் உடன்பிறப்புகளிடையே மனக்கசப்புஇருந்தாலும் தேர்தலில் எதிர்களை துவம்சம் செய்வதேஇலக்கு என்பதை உறுதியாக்கி வருகின்றனர் அதிகம் பேசாத அமைதியான சிறுநடையில் தென்காசி கலைஞர் அறிவாலயத்திற்கு வந்து செல்லும் அன்பகம் கலை அவர்களின் வியூகம் வெற்றி பெறுகிறது

# says US agrees to release frozen Iranian assets, White House denies

*Saturday denied reports that Washington has agreed to unfreeze Iranian assets, after a report by Reuters claimed it, citing a senior Iranian source. The report said that ahead of Islamabad talks, Washington has agreed to defreeze Iranian assets in Qatar and other banks. The move is crucial as defreezing of assets was one of the two preconditions put forward by Iran to begin the talks with the US.*

*Even as US and Iranian delegates have arrived in Islamabad for crucial talks amid a two-week pause to Middle East fighting, suspense over the timing of the talks continues. The Iranian state media is reporting the timing if the negotiations will determined only after the after the status of preconditions is clarified.*

*Earlier, Iran chief negotiator has said that a ceasefire in Lebanon and removal of sanctions on Iran are two preconditions that must be met to start the negotiations in Pakistan's capital.*

*US vice president and chief negotiator JD Vance arrived in Islamabad on Saturday morning and was welcomed by Pakistan army chief Field Marshal Asim Munir, foreign minister Ishaq Dar and interior minister Mohsin Naqvi. Steve Witkoff and Jared Kushner from the US side also arrived in Islamabad for crucial talks with Iran in Pakistan's capital city.*

*The high-stakes talks between Iran and the US are set to be held in Islamabad today with Pakistan as the mediator. According to AFP, the talks are expected to be indirect and the two delegations will be sitting in separate rooms. Pakistani officials will shuttle proposals between them, mirroring the format used in earlier Oman-mediated rounds.*



*China is preparing to ship weapons to Iran amid its fragile truce with the United States, CNN reported, citing US intelligence sources. Beijing is reportedly working to ship the new air defense systems to Iran within the next few weeks through third countries to mask their true origin. This comes at a time when US and Iran are set to hold crucial negotiations in Islamabad today while the truce is already threatened by Israel's aggression in Lebanon.*

*As US vice president JD Vance was en route Islamabad to lead to US delegation for the negotiations, US President Donald Trump wished him luck and said, "Well, I wish them luck. He's got a big thing. I'll find out what's going on. They're militarily defeated, and now we're going to open up the gulf (Strait of Hormuz) with or without a deal. But that'll be open, we're going to be on the straight as they call it."*

*Meanwhile, Iran struck a cautious tone as its delegation landed in Pakistan late Friday, making it clear that while dialogue is on the table, trust is not. Iranian Parliament Speaker Mohammad Bagher Ghalibaf, who is leading the delegation said, "Our experience of negotiations with the Americans has always been met with failure and breach of promise." On the American side, Vice President JD Vance is en route Islamabad and will be joined by Jared Kushner and special envoy Steve Witkoff.*

*Iran also warned that the failure to meet the preconditions could hamper the peace process as Ghalibaf on Friday said a ceasefire in Lebanon and the release of Iran's blocked assets were the prerequisites to start the negotiations with the US.*

*In a post on Truth Social, he wrote, "The Iranians don't seem to realize they have no cards, other than a short term extortion of the World by using International Waterways. The only reason they are alive today is to negotiate!"*

*'Make or break' moment, says Pakistan*

*Hosting the talks, Pakistan has acknowledged the difficult road ahead. Prime Minister Shehbaz Sharif described the negotiations as entering a decisive phase.*

*"A temporary ceasefire has been announced, but now an even more difficult stage lies ahead: the stage of achieving a lasting ceasefire, of resolving complicated issues through negotiations," news agency AFP quoted Sharif as saying.*

*The Islamabad talks come against the backdrop of a fragile two-week ceasefire between the US and Iran – one that Tehran says also includes a halt to Israeli operations in Lebanon. While Israel PM Benjamin Netanyahu and Trump has denied having any such arrangement.*

*Lebanese authorities report that over 1,950 people have been killed in recent weeks of fighting, with more than 350 deaths recorded on a single day shortly after the ceasefire took effect, reported AFP.*

*The Islamabad meeting is being seen as a critical attempt to convert this temporary pause into a more durable peace framework and bring an end to the prolonged West Asia conflict.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.